திருவண்ணாமலை மாவட்டம்: கு.பிச்சாண்டி முன்னிலையில்

பழையனூர் ஊராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, ஜூலை 16-

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (15.07.2025) திருவண்ணாமலை வட்டம், பழையனூர் ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தினை இன்று கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் தமிழ் நாட்டில் உள்ள கடைகோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறையின் சேவைகள் மற்றும் திட்டங்களை அவர்களுடைய இல்லங்களுக்கே சென்று வழங்கும் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்தனை துவக்கி வைத்தார். அதனை தொடர்ந்து, திருவண்ணாமலை வட்டத்தில் பழையனூர் ஊராட்சியில் மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் சிறப்புரையாற்றியதாவது:

முதலமைச்சர் அவர்கள் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தினை சிதம்பரத்தில் துவக்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, நமது மாவட்டத்தில் பழையனூர் ஊராட்சியில் கல்லொட்டு, வேளையாம்பாக்கம், கண்டியாங்குப்பம், வலசை ஆகிய கிராமங்கள் பயன் பெறும் வகையில் பொது மக்கள் அதிகம் அணுகும் அரசு துறைகளான ஊரகவளர்ச்சித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை. மக்கள் நல்வாழ்வுத்துறை, மின்சாரத் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபாண்மையினர் நலத்துறை. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை. கால்நாடைபராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர்நலத்துறை. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை. வேளாண்மைத் துறை. சிறப்பு செயலாக்கத் துறை ஆகிய துறைகளின் வாயிலாக தன்னார்வலர்கள் மூலம் மனுக்கள் பெறப்பட்டு, உடனடியாக தீர்வு காணும் நோக்கத்தில் இந்த முகாம் நடைபெற்று வருகிறது.

மேலும், நமது மாவட்டத்தில் நகர்புறங்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், ஊரக பகுதிகளில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும், இந்த முகாம்களின் வாயிலாக வழங்கப்படும். உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின்கீழ் ஜீலை 15 முதல் நவம்பர் 14 வரை நகர பகுதிகளில் 80 முகாம்களும், ஊரக பகுதிகளில் 307 முகாம்கள் என மொத்தம் 387 முகாம்கள் நடைபெற வுள்ளது. ஊரக பகுதிகளில் 842 கிராம பஞ்சாயத்துகளில் 5 இலட்சத்து 49 ஆயிரத்து 860 குடும்பங்களும், நகரப் பகுதிகளில் 270 வார்டுகளில் 1 இலட்சத்து 61 ஆயிரத்து 348 குடும்பங்களும் மொத்தம் 7 இலட்சத்து 11 ஆயிரத்து 208 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மேற்படி ஊரக பகுதிகளில் 15 துறை களுக்கான 46 சேவைகளுக்கு 2 ஆயிரத்து 51 தன்னார்வலர்களும், நகர பகுதிகளில் 13 துறைகளுக்கான 43 சேவைகளுக்கு 722 தன்னார்வலர்களும் மொத்தம் 2 ஆயிரத்து 773 தன்னார்வலர்கள் மூலம் பொதுமக்களின் வீடுகளுக்கு நேரில் சென்று மேற்படி துறைகளின் சேவைகள் பற்றியும் முகாம்கள் குறித்து நாள் மற்றும் நேரம் ஆகியவை துண்டு பிரசுரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களும் வழங்கப்பட்டது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை விடுப்பட்ட தாய்மார்கள் இந்த முகாம்களில் விண்ணப்பங்களை வழங்கலாம். தகுதியுள்ள அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும். முதலமைச்சர் அவர்கள் மனுநீதிசோழன் மக்களுடைய தேவைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்தது போல முதலமைச்சர் அவர்கள் இச்சிறப்புமிகு உங்களுடன் ஸ்டாலின் திட்டம் மூலமாக மக்களை தேடி மாவட்ட நிர்வாகம் என்கின்ற அடிப்படையில் அரசு துறை அலுவலர்கள் மக்கள் வசிக்கும் நகர்ப்புற மற்றும் கிராம புற பகுதிகளுக்கு சென்று முகாமிட்டு மக்களுடைய கோரிக்கை மனுக்களை பெற்று அவற்றிற்கு உரிய தீர்வை விரைவாக வழங்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள். இந்த திராவிட மாடல் அரசு என்றென்றும் மக்களின் அரசாக மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றும், நம்மில் ஒருவராக நமக்காக உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை செயல்படுத்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் அவர்களுக்கு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் எனவும் இந்த திட்டங்கள் எல்லாம் பெற்று பயனடைய வேண்டுமென பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதனைத்தொடர்ந்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் அவர்கள் இன்றைய தினம் நடைபெற்ற முகாமில் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு பல்வேறு துறைகளின் சார்பாக பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வாங்கினார்கள். மேலும் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் வழங்கி மனுக்கள் மீது உடனடியாக தீர்வுகாண அறிவுறுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.இராம்பிரதீபன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு.மணி, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் தனபதி மற்றும் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் அருகேயுள்ள அதிசயபுரத்தில் நடைபெற்ற பாதிரியார் ரவீந்திரன் அவர்களின் இறை மனிதப் பணியில் 25 ஆண்டுகள் நிறைவு பெற்றதை தொடர்ந்து நடைபெற்ற வெள்ளி விழாவில், கழகத் துணைப் பொதுச் செயலாளர் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்று உரையாற்றினார். உடன் மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளருமான அனிதா இராதாகிருஷ்ணன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராமஜெயம், ஸ்ரீவைகுண்டம் ஒன்றியச் செயலாளர் எஸ்.ஆர்.கோட்டாளம், ஏரல் வார்டுச் செயலாளர் மணிவண்ணன், மாவட்டப் பிரதிநிதி தியாகராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் தொடங்கி வைக்கப்பட்டதைத்தொடர்ந்து,

சேலம் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்!

சேலம், ஜூலை 16-

முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நேற்று (15.07.2025) தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெறும் இடங்களில் ஒன்றான சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் ஜாகீர் ரெட்டிப்பட்டி பி.சி.சி திருமண மண்டபத்தில் திட்டத்தினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் இன்று முதல் வரும் நவம்பர் மாதம் வரை நகர்ப்புறப்பகுதிகளில் 168 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 264 முகாம்களும் என மொத்தம் 432 சிறப்பு முகாம்கள் மூலம் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட உள்ளது. தமிழ் நாட்டில் உள்ள கடைகோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

முகாம்களில் பங்கேற்க உள்ள அனைத்து பொதுமக்களுக்கும் அவர்களின் உடல்நலனை காத்திடும் வகையில் மருத்துவ சேவைகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில் தன்னார்வலர்கள் மூலம் வீடு வீடாக சென்று விண்ணப்பங்கள் மற்றும் தகவல் கையேடுகள் வழங்கி அவர்களை இம்முகாம்களில் பங்கேற்க செய்து கோரிக்கைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், முகாம் நடைபெறும் இடங்களில் பொது மக்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, சாமியான வசதி, சுகாதார வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வுதள வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகள் மற்றும் மருத்துவ முகாம்கள், இசேவை மையங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்முகாமில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, எரிசக்தித்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, வேளாண்மை உழவர் நலத்துறை, பிற்படுத் தப்பட்டோர் நலத் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சிறுகுறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தகவல் தொழில் நுட்ப துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை மற்றும் பால்வளத்துறை என ஊரகப்பகுதிகளில் 15 துறைகள் மற்றும் நகர்ப்புறப்பகுதிகளில் 13 துறைகளின் வாயிலாக செயல்படுத்தப்படும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, வீட்டு வரி, சொத்து வரி, பெயர் மாற்றம், புதிய குடிநீர் இணைப்பு, கட்டட மனைப்பிரிவு அனுமதி, பட்டாவில் பெயர் மாற்றம், சாதிச்சான்று, இருப்பிடச் சான்று, வருமான சான்று, வாரிசு சான்று, தனிப்பட்டா, கூட்டுப்பட்டா, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் நல உதவித்தொகை, மின்னணு குடும்ப அட்டை, ஆதார் அட்டை, பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் உள்ளிட்ட சேவைகள் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் தொடர்ச்சியாக தமிழ்நாட்டு மக்களின் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். ஏற்கனவே பல்வேறு திட்டங்கள் வாயிலாக பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அதற்கான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் விடுபட்ட பொது மக்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் ஏற்கனவே கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வாயிலாக 5.50 இலட்சம் மகளிர் பயனடையும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கான விதிகளில் சற்று தளர்வு ஏற்படுத்தி அறிவித்துள்ளார்கள். தற்பொழுது கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்படும்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நேற்று (15.07.2025) தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெறும் சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் ஜாகீர் ரெட்டிப்பட்டி பி.சி.சி திருமண மண்டபத்தில் திட்டத்தினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

சேலம் மாவட்டத்தில் இன்றையதினம் நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி, எருமாபாளையம் பகுதிக்குட்பட்டவர்களுக்கு எருமாபாளையம் வள்ளுவர் நகர் முத்தா யம்மாள் திருமண மண்டபத்திலும், எடப்பாடி நகராட்சி வார்டு 1,2,3க்குட்பட்டவர்களுக்கு எடப்பாடி ஜே.கே.பி சாலை நாச்சிபாளையம் காளியம்மன் கோவில் திருமண மண்டபத்திலும், அயோத்தியாப்பட்டணம் பேரூராட்சி, வார்டு 1,10,11,12,13,14,15 க்குட்பட்டவர்களுக்கு அயோத்தியாப்பட்டணம் ஆத்தூர் மெயின் ரோடு வாசு மஹாலிலும், சேலம் ஊராட்சி ஒன்றியம், இனாம் வேடுகத்தாம்பட்டி, திருமலைகிரி பகுதிகளுக்கு உட்பட்டவர்களுக்கு திருமலைகிரி செம்மண்திட்டு கிருஷ்ணமூர்த்தி மஹாலிலும், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், சென்னகிரி, ராஜபாளையம் பகுதிகளுக்கு உட்பட்டவர்களுக்கு சென்னகிரி ருக்மணி அம்மாள் திருமண மண்டபத்திலும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) விவேக் யாதவ், வருவாய் கோட்டாட்சியர் திருமதி அ.அபிநயா, உதவி ஆணையர்கள் திருமதி இலட்சுமி, திரு.வேடியப்பன், தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி ச.ஜானகி உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மதுரை வடக்கு மாவட்டம்

அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு, அலங்காநல்லூர் வடக்கு, அலங்காநல்லூர் தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் - மற்றும் ஒன்றிய பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் மதுரை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட,அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு ஆகிய இரண்டு ஒன்றியங்கள், **அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு, அலங்காநல்லூர் வடக்கு, அலங்காநல்லூர் தெற்கு** ஆகிய 4 ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு, ஒன்றிய பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு, அலங்காநல்லூர் வடக்கு, அலங்காநல்லூர் தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாக அமையும்.

அலங்காநல்லூர் கிழக்கு ஒன்றியம் : 1.முடுவார்பட்டி, 2.தேவசேரி, 3.ஆதனூர்,4.பெரியஊர்சேரி, 5.பி.மேட்டுபட்டி , 6.வாவிடமருதூர், 7.அச்சம்பட்டி, 8.பண்ணைகுடி, 9.தண்டலை, 10.மணியஞ்சி, 11.கோட்டைமேடு ஆகிய 11 ஊராட்சிகள்.

அலங்காநல்லூர் மேற்கு ஒன்றியம் : 1.வடுகபட்டி, 2.தனிச்சியம், 3.அய்யங்கோட்டை, 4.கொண்டையம்பட்டி, 5.மேலசின்னனம்பட்டி, 6.கள்வேலிபட்டி, 7.பெரியஇலந்தைகுளம், 8.குட்டிமேய்க்கிபட்டி ஆகிய 8 ஊராட்சிகள்

அலங்காநல்லூர் வடக்கு ஒன்றியம் : 1.வலையபட்டி, 2.சத்திரவெள்ளாளபட்டி, 3.இராஜாக்காள்பட்டி, 4.66-மேட்டுப்பட்டி, 5.சேந்தமங்கலம், 6.கோடாங்கிபட்டி, 7.பாரைப்பட்டி, 8.வெள்ளையம்பட்டி, 9.மாணிக்கம்பட்டி ஆகிய 9 ஊராட்சிகள்

அலங்காநல்லூர் தெற்கு ஒன்றியம் : 1.டி.மேட்டுபட்டி, 2.தெத்தூர், 3.கல்லனை, 4.அழகாபுரி, 5.அய்யூர், 6.கீழச்சின்னனம்பட்டி, 7.எர்ரம்பட்டி, 8.சின்னஇலந்தைகுளம், 9.அ.கோவில்பட்டி ஆகிய 9 ஊராட்சிகள்

ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு, அலங்காநல்லூர் வடக்கு, அலங்காநல்லூர் தெற்கு** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

அலங்காநல்லூர் கிழக்கு ஒன்றியம்:

பொறுப்பாளர் : **அ.தனராஜ்,** 66, மேட்டுப்பட்டி, சேந்தமங்கலம் (அ), பாலமேடு(வழி), வாடிப்பட்டி(தா) மதுரை மாவட்டம்.

பொறுப்பு குழு உறுப்பினர்கள் : **பெ.தனுஷ்கோடி**, பண்ணைகுடி, அச்சம்பட்டி(அ),மதுரை. **சோ.சுந்தராஜன்**, முடுவார்பட்டி,முடுவார்பட்டி(அ), மதுரை. **பெ.ராஜேந்திரன்**, வலசை, அலங்காநல்லூர் (அ), மதுரை. **க.காமாட்சி (எ) மணிமாறன்**, முடுவார்பட்டி, முடுவார்பட்டி(அ), மதுரை. **பொ.ராசு,ஆதனூர்**, முடுவார்பட்டி(அ), மதுரை. **இ.சரவணன்,** தண்டலை, குமாரம்(அ), மதுரை. **ப.பிரவின்,** 15 பி மேட்டுப்பட்டி, மேட்டுப்பட்டி(அ), மதுரை. **செல்வி தி.ரேகா,**தேவசேரி, முடுவார்பட்டி(அ), மதுரை.

அலங்காநல்லூர் மேற்கு ஒன்றியம்

பொறுப்பாளர் : **வி.அருண்குமார்,** கல்வேலிபட்டி(அ), வாடிப்பட்டி(தா), மதுரை.

பொறுப்பு குழு உறுப்பினர்கள் : **ச.குழந்தைவேல்,** கொண்டையம்பட்டி(அ),வாடிப்பட்டி, மதுரை. **ரா.ரமேஷ்,** கோவிலூர்(அ),மதுரை. **மு.அமுதன்,** வடுகபட்டி, தனிச்சியம்(அ),மதுரை. **பா.ஜெயப்பிரகாஷ்**, பெரிய இலந்தைகுளம்(அ),மதுரை. **ப.பெரியசாமி**, தனிச்சியம்(அ), மதுரை. **ரா.காமாட்சி,** கீழக்கரை, குட்டிமேக்கிபட்டி(அ), மதுரை. **மோ.அலக்ஸ்பாண்டியன்**, அய்யங்கோட்டை(அ),மதுரை. **பா.தேன்மொழி,** பெரியஇலந்தைகுளம் (அ), மதுரை.

அலங்காநல்லூர் வடக்கு ஒன்றியம்

பொறுப்பாளர் : **அ.முத்தையன்**, வெள்ளையம்பட்டி(அ), பாலமேடு(வழி), வாடிப்பட்டி(தா), மதுரை.

பொறுப்பு குழு உறுப்பினர்கள் : **அ.பழனி,** சேந்தமங்கலம்(அ)மதுரை. **அ.இளமாறன்**, வெள்ளையம்பட்டி, மதுரை. **ரா.சின்னராசு**, பாரைப்பட்டி. கோடங்கிபட்டி(அ),மதுரை. **பெ.பெரியகருப்பன்**, பொந்துகம்பட்டி, சேந்தமங்கலம்(அ),மதுரை. **வெ.நாகராஜன்**, ராஜாக்காள்பட்டி,பாலமேடு(வழி),மதுரை. **ரா.சிவக்குமார்**, மாணிக்கம்பட்டி, வெள்ளையம்பட்டி (அ), மதுரை. **இ.காயத்ரி,** லக்கம்பட்டி, சத்திரவெள்ளாளபட்டி(அ), வாடிப்பட்டி(தா), மதுரை. **சி.குணசேகரன்**, வலையபட்டி, சத்திரவெள்ளாளபட்டி(அ), வாடிப்பட்டி(தா), மதுரை.

அலங்காநல்லூர் தெற்கு ஒன்றியம்

பொறுப்பாளர் : **சா.பரந்தாமன்,** அ.புதுப்பட்டி(அ), வாடிப்பட்டி(தா), மதுரை.

பொறுப்பு குழு உறுப்பினர்கள் : **மு.நடராஜன்,** இடையபட்டி, எரம்பட்டி(அ),மதுரை. **மு.தங்கமணி,** காந்திகிராமம், கல்லணை(அ), மதுரை. **க.சுந்தர்ராஜன்,** எரம்பட்டி(அ), மதுரை, **மூ.வடிவேல்.** கொழிஞ்சிபட்டி. தெத்தூர்(அ), மதுரை. **து.மகேஷ்,** வைகாசிபட்டி, எரம்பட்டி(அ), மதுரை. **ம.சேகர்,** கீழச்சின்னம்பட்டி, எரம்பட்டி(அ), மதுரை. **பா.அபுதாஹிர்,** அய்யூர்(அ), மதுரை. **மு.ராதா கிருஷ்ணன்**, சின்னஇலந்தைகுளம், மரியம்மாள்குளம்(அ), வாடிப்பட்டி, மதுரை.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 15.07.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய முன்னாள் உறுப்பினர்

முனைவர் ஆர்.பெருமாள்சாமி மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை,ஜூலை 16-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய முன்னாள் உறுப்பினர் - முனைவர் ஆர்.பெருமாள்சாமி அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து வருந்திய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து நேற்று விடுத்த செய்தி வருமாறு:-

திண்டுக்கல் மாவட்டம் - ஒட்டன்சத்திரம் வட்டம் - 16 புதூர் ஊராட்சியைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் ஆர்.பெருமாள்சாமி அவர்கள், கல்லூரி முதல்வராகவும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினராகவும் தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்தின் உறுப்பினராகவும் பணியாற்றி தற்போது நூருல் இஸ்லாம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தர் பொறுப்பிலிருந்தார்.

அவர் உடல்நலக்குறைவு காரணமாக இன்று (15.7.2025) பிற்பகல் சென்னை தனியார் மருத்துவ மனையில் இயற்கையெய்தினார்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா முன்னிலையில், தி.மு.க. அயலக மாநில துணைச் செயலாளர், 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதிஇளம்சுருதி தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், தமிழ்நாட்டின் மண் – மொழி – மானம் காக்க ஓரணியில் தமிழ்நாடு மாபெரும் உறுப்பினர் சேர்க்கை முகாமை குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி (எ)விவேகானந்தர், மண்டல குழு தலைவர் இந்திரன், பகுதி கழகச் செயலாளர்கள் ஆ. நடராசன, இரா.சுரேஷ், எம்.சேகர், காமராஜ், தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சத்தியசீலன் கலந்து கொண்டனர்.